# மக்கள் நலனுக்காக கலைஞரின் ‘வருமுன் காப்போம் - மக்களைத் தேடி மருத்துவம் - இன்னுயிர் காப்போம்’ திட்டங்கள் !

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிலுரை...

5ஆம் பக்கத் தொடர்ச்சி

மாவட்டத்தில் 2023 நவம்பர் திங்கள் 22 ஆம் தேதி ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. ஈரோடு, கன்னியாகுமரி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடங்கப்பட்ட அந்தத் திட்டத்தின்படி இதுவரை 2,60,218 பேர் cancer screening செய்யப்பட்டு, அதில் 76 பேருக்கு தொடக்க நிலை புற்றுநோய் இருப்பதாக கண்டறியப்பட்டு அவர்களுக்கு இன்றைக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

## பாம்பு - நாய் கடிகளுக்கு தயார் நிலையில் மருந்துகள்!

ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும், துணை சுகாதார நிலையங்களாக இருந்தாலும், இவைகளெல்லாம் அமைந்திருக்கிற இடங்கள் கிராமப்புறங்கள், மலை கிராமங்கள். இப்படி மலை கிராமங்களிலும், கிராமப்புறங்களிலும் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் பாம்பு கடிக்கு மாத்திரை இருக்காது, மருந்து இருக்காது. நாய்க்கடிக்கு மருந்து இருக்காது. பாம்பு கடித்தாலோ, நாய்க்கடித்தாலோ தாலுகா மருத்துவமனைக்கு போக வேண்டும், வட்டார அரசு மருத்துவமனைக்கு போக வேண்டும். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாம்பு கடிக்கும், நாய்க்கடிக்குமான மருந்துகளை ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இருப்பு வைக்க வேண்டுமென்று சொல்லி, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், பாம்பு கடிக்கான மருந்து antisnake venom நாய்க்கடிக்கான மருந்து antirabies vaccine என்கின்ற இரண்டு வகை மருந்துகள் இன்றைக்கு 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது .

### முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டம்

முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தைத் தொடங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த முதலமைச்சர் காப்பீட்டு திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் எந்த அளவிற்கு செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் நன்றாகவே அறிவீர்கள். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், அ.தி.மு.க. ஆட்சியில் அதற்கான premium 699 ரூபாய்; இப்போது premium 849 ரூபாய். அ.தி.மு.க. ஆட்சியில் குடும்ப ஆண்டு வருமானம் 72 ஆயிரம் ரூபாய்; இப்போது 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். காப்புறுதி தொகை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2 இலட்சம் ரூபாய்; இப்போது 5 இலட்சம் ரூபாய். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சிகிச்சை முறைகள் 1,423; இப்போது 2,053. அப்போது எத்தனை மருத்துவமனைகள் செயல்படுத்தப்பட்டது என்றால் 970; இப்போது 1,834 (மேசையைத் தட்டும் ஒலி) பிரத்யேக சிகிச்சைகள் அப்போது 2; இப்போது 8. இந்த அளவிற்கு கலைஞர் காப்பீட்டு திட்டம் என்பது 1 கோடியே 47 இலட்சம் குடும்பங்களை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### உடல் உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு

உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் 2007 ஆம் ஆண்டு ஏற்படுத்தி, அதற்கான ஆணையம் ஒன்றையும் அமைத்தார். அத்தகைய

கலைஞர் அவர்கள் வழியில் முதலமைச்சர் அவர்கள் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்று 2392023ல் அறிவித்தார். 23.9.2023ல் உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்று அறிவித்தவுடன் இன்னும் ஒரு வருடம்கூட ஆகவில்லை, இதுவரை 199 உடல்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டிருக்கிறது. அப்படியானால், 199 பேரும், 11 மாத காலத்தில் அவர்களுடைய உடல் உறுப்புகளை தானம் செய்து இதன்மூலம் நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் பிழைத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசியவர்கள் சொன்னார்கள் MRBயின்மூலம் பணி நியமனம். Medical Services Recruitment Board என்கின்ற MRBன்மூலம் இதுவரை 1,021 மருத்துவர்கள் உட்பட 3,036 பேர் பணி நியமனங்கள் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு மகிழ்ச்சியான செய்தி. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பணி நியமனம் செய்யப்படுகிறபோதே counselling செய்து, அவர்கள் விரும்புகிற இடங்களுக்கு பணி ஆணைகளை வெளிப்படைத்தன்மையோடு தந்து கொண்டிருக்கிற ஆட்சியாக இந்த ஆட்சி இருந்து கொண்டிருக்கிறது. அந்தவகையில் இதுவரை 3,036 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. இன்னமும் நிரப்பப்படுவதற்கு தயாராக இருக்கிற பணியிடங்கள் 2,553 மருத்துவர்கள், 2,750 கிராம சுகாதார செவிலியர்கள், 986 மருந்தாளுநர்கள், 1,066 சுகாதார ஆய்வாளர்கள் 557 இதர பணியாளர்கள் என்று பல்வேறு வழக்குகளும் இருந்துகொண்டிருக்கிற நிலையில் அந்த வழக்குகளுக்கெல்லாம் தீர்வு காணப்பட்டு, மிக விரைவில் 7,412 பேர் இந்தத் துறைக்கு புதிதாக பணி நியமனம் செய்யப்படவிருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் சொன்னார், 16 மாத காலத்தில் பொதுப் பணித் துறையின் மகத்தான ஒரு சாதனை என்று எடுத்துக்கொண்டால், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை. இந்த கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் 387 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி தந்து, மிகப்பெரிய அளவில் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

உலக வரலாற்றில் ஒரு மருத்துவமனை கட்டி ஓராண்டிற்குள் 3 இலட்சத்து 13 ஆயிரத்து 864 பேர் அதன்மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, அந்த மருத்துவமனையிலிருக்கிற உபகரணங்களைப் போல் இந்தியாவில் இருக்கிற 36 மாநிலங்களில் எந்த அரசு மருத்துவமனையிலும் அதிலே இருக்கின்ற மருத்துவ உபகரணங்களைப் போல இல்லை. Robotic Surgery equipment, 1.5 Tesla BioMatrix Auto MRI, Double Balloon Enteroscopy, Holmium Laser போன்ற அதிநவீன கருவிகள், அதிநவீன 3D மூளை அறுவை சிகிச்சை Microscope போன்ற இந்த கருவிகள் இந்தியாவில் வேறு எந்த அரசு மருத்துவமனையிலும் இல்லை. இந்த கருவிகளெல்லாம் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் மக்களுக்கு மிகப் பெரிய அளவிலான மருத்துவ தேவையை செய்துகொண்டிருக்கிறது.

### முதியோர்க்கென்று தனி மருத்துவமனை!

அதேபோல், இந்தியாவில் ஒன்றிய அரசு 2 இடங்களில் தேசிய முதியோர் நல மருத்துவ மையங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார். ஒன்று AIIMSலும் ஒன்று சென்னையிலும். AIIMSல் அமைக்கப்படும் என்று சொன்னது AIIMS மருத்துவமனையில் ஒரு

Blockல் அமைத்தார். ஆனால், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னையில் இன்றைக்கு ஒரு தேசிய முதியோர் நல மருத்துவ மையம் அமைக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி 25 ஆம் தேதிதான் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த 5 மாத காலத்தில் 54,852 முதியோர்கள் இன்றைக்கு அதன்மூலம் பயன்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடல் நலத்தைக் காப்பது என்பது இந்த நடப்போம் நலம் பெறுவோம் என்கின்ற வகையிலான ஒரு திட்டம்.

நானும் எங்களுடைய துறையின் செயலாளரும் டோக்கியோவிற்கு சென்றிருந்தபோது அங்கே ஒரு சாலையைப் பார்த்தோம். 8 கிலோ மீட்டர் நீளத்திற்கான Health walk road ஒன்றைப் பார்த்தோம். Health walk road எதற்காக அவர்கள் அங்கே 8 கிலோ மீட்டர் அமைத்திருக்கிறார்கள் என்று கேட்டபோது, அவர்கள் சொன்னது, 8 கிலோ மீட்டர் நடந்தால் 10,000 அடிகள் வரும். 10,000 அடிகள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் நடப்பது என்பது அவரவர்களுடைய உடல் நலனுக்கு நல்லது என்று சொன்னார்கள். அதை நம்முடைய அவர்களிடத்தில் சொன்னோம். முதலமைச்சர் அவர்கள் சொன்னார், ஜப்பானில் டோக்கியோவில் ஒரு சாலை இருக்கிறது. தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களிலும், 38 சாலைகளை அந்த Health walk சாலைகளை அமையுங்கள் என்று உத்தரவிட்டார்கள்.

அந்தவகையில் அந்த சாலைகள் அமைக்கப்பட்டு 4.11.2023 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் பெருமதிப்பிற்குரிய உதயநிதி அவர்களால் அந்த சாலைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி பல்வேறு நம்முடைய விஷயங்கள் இந்தத் துறையில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பன்னாட்டு மருத்துவ மாநாடு

அந்த வகையில் ஒரு மிகப் பெரிய அளவிலான மாநாடு இந்தத் துறைக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஒரு மாநாடு நடைபெற்றது. 19.1.2024 முதல் 21.1.2024 வரை இந்திய வரலாற்றில் வேறு எந்த மாநிலத்தின் மக்கள் நல் வாழ்வுத் துறையும் செய்யாத அளவிற்கு ஒரு 3 நாட்களுக்கான பன்னாட்டு மருத்துவ மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் மருத்துவத்தின் எதிர்காலம் பன்னாட்டு மருத்துவ மாநாடு அந்த மாநாட்டில் அமெரிக்காவில் இருந்தும், இங்கிலாந்தில் இருந்தும், ஜெர்மனியில் இருந்தும், சிங்கப்பூரில் இருந்தும், கத்தார், ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளைச் சேர்ந்த 11,000 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அதில் 28 புகழ் பெற்ற மருத்துவ வல்லுநர்கள் உரையாற்றினார்கள்.

இந்தியா முழுவதிலும் இருந்து நம் இந்திய தேசத்தைச் சேர்ந்த 150 மருத்துவ வல்லுநர்கள் கலந்துகொண்டு அங்கே உரையாற்றினார்கள். அந்த மாநாட்டைப் பொறுத்தவரையில் 625க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. எதிர்கால மருத்துவ ஆராய்ச்சிக்கு இந்த மாநாடு என்பது இன்றைக்கு பெரிய அளவில் உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

### இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்

இன்றைக்கு இந்தத் துறைக்கு கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்திருக்கிற அந்த விருதுகளின் பட்டியலை ஒரு நிமிடத்தில் சொல்லி முடிக்கிறேன். உணவு பாது

## உடல் உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு - அரசு மரியாதை

காப்பு மற்றும் தர நிர்ணயம் Eat Right Challenge போன்ற இந்த நிகழ்வுகளுக்காக இதுவரை 2 முறை இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு முதல் மாநிலம் என்றும் 150 மாவட்டங்கள் கலந்துகொண்டதில் 75 முறை நம்முடைய மாவட்டங்களுக்கும் இந்த விருதுகள் கிடைத்திருக்கிறது. பெண்களுக்கான நவீன கருத்தடை சாதனம் பொருத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் என்கின்ற வகையில் விருது கிடைத்தது. கர்ப்பிணி பெண்களுக்கான Hepatitis B test செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் என்கின்ற அந்த விருது கிடைத்தது. Teleconsultation தொலைதூர மருத்துவச் சேவை என்கின்ற அந்த தலைப்பில் இந்தியாவில் தமிழ்நாடு சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறதுஎன்று முதல்பரிசுகிடைத்திருக்கிறது. மகப்பேறு சிக்கல்கள் கர்ப்பிணிகளுக்கு அளிக்கப்படுகிற சிகிச்சைகளில் மிகத் தரமானதாக தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று இந்தியாவிற்கான முதல் மாநிலம் விருது கிடைத்திருக்கிறது.

பள்ளி சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய தூதுவர் திட்டத்தில் இந்தியாவில் முதல் மாநிலம் என்று தமிழ்நட்டிற்கு கிடைத்திருக்கிறது. National Organ and Tissue Transplant Organization உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் best state award தமிழ்நாட்டிற்கு கிடைத்தது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு best performance state என்கின்ற அந்த விருது கிடைத்தது. இறுதியாக அந்த விருது கிடைத்த பட்டியல்களில் இன்னொன்று, தேசிய தர உறுதி நிர்ணயம் National Quality Assurance Standards என்கின்ற ஒரு விருது 2012ல் உருவாக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை கடந்த 12 ஆண்டுகளில் நம் தமிழகத்திற்கு கிடைத்திருக்கிற விருதுகளின் எண்ணிக்கை 614.

இந்த 614ல் கடந்த 2021 ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த 9 ஆண்டுகளில் அவர்களுக்குக் கிடைத்த விருதுகள் 79. இந்த 3 ஆண்டுகளில் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளபதி அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சிக்குக் கிடைத்திருக்கின்ற விருதுகள், 545. 10 ஆண்டுகளுக்கு அவர்களுக்குக் கிடைத்த விருதுகள் 79, 3 ஆண்டுகளில் இந்தத் துறைக்குக் கிடைத்திருக்கிற விருதுகள், 545. அதேபோன்று “Lakshya” என்ற ஒரு விருது. (Labour Room Quality Improvement Initiative) என்கின்ற அந்த விருது 2017 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. ஆக, இதுவரையில் நாம் பெற்றிருக்கிற விருதுகளின் எண்ணிக்கை, 84. 5 ஆண்டுகளில் 84ல் அவர்கள் ஆட்சியில் கிடைத்த விருதுகள் 29, இந்த மூனறு ஆண்டுகளில் நமக்குக் கிடைத்திருக்கிற விருதுகள் 55. அந்தவகையில், இவ்வாறான விருதுகள் அரசுக்குக் கிடைத்திருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, குஜராத் மாநிலத்தை இன்று அனைவரும் உதாரணம் காட்டுகிறார்கள். அந்த குஜராத் மாநிலத்திலிருந்து, 3.10.2023 அன்று அந்த மாநிலத்தின் மருத்துவ இயக்குநர் மருத்துவர். ராஜேஷ் வைத்யா அவர்கள் தலைமையில் 60 மருத்துவ அலுவலர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். வந்து 3 நாட்கள் மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பினை சுற்றிப்பார்த்துவிட்டு, “தமிழ்நாட்டிலிருக்கும் மருத்துவக் கட்டமைப்பு எங்கள் குஜராத் மாநிலத்திற்கு வருவதற்கு இன்னும் 20 ஆண்டுகள் ஆகும்” என்று பத்திரிகையாளர்களை சந்திந்தித்துவிட்டு, சொல்லிவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதே போன்று மேகாலயாவிலிருந்து 29 மருத்துவர்கள் உயிர்காக்கும் பேறுகால மருத்துவ சிகிச்சைக்கு பயிற்சி பெறுவதற்காக தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்திருந்தார்கள். அந்த 29 மருத்துவர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அப்போது அம்மாநில மேகாலயா மருத்துவத் துறை அமைச்சர், Dr. Mazel Ampareen Lyngdoh அவர்கள் “மேகாலயாவிற்கு இன்றைக்கு தமிழ்நாடு உயிர் காக்கும் உதவிகளைச் செய்திருக்கிறது. உங்கள் முதல்வர் அவர்களுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்” என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். மேற்கு Australiaவின் சுகாதாரத் துறை அமைச்சர் Ms. AmberJade Sanderson அவர்கள் சென்னைக்கு வந்து, தமிழ்நாட்டிலிருக்கின்ற 3, 4 மருத்துவமனைகளின் கட்டமைப்பைப் பார்த்துவிட்டு, எங்கள் Australiaவில்கூட இம்மாதிரியான மருத்துவக் கட்டமைப்பு இல்லையென்று மனதார பாராட்டிவிட்டுச் சென்றார்.

மால்டா குடியரசின் மருத்துவர் Jo Etienne Abela என்பவரும் TNMSCலிருந்து மருந்துகளைக் கொள்முதல் செய்வதைப் போன்று, எங்களுக்கும் செய்து தாருங்கள் என்ற கோரிக்கையை விடுத்துச் சென்றிருக்கிறார். இந்தவகையில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்து, மாநில மருத்துவக் கட்டமைப்பைப் பார்த்து பாராட்டிச் சென்றிருக்கிறார்கள்.

### ப.சிதம்பரம் பாராட்டு!

நேற்றையதினம் சமூகவலைதளத்தில் ஒன்றிய அரசின் முன்னாள் நிதி அமைச்சர், பொருளாதார வல்லுநர், ப. சிதம்பரம் சமூகவலைதளத்தில் ஒரு செய்தியை பதிவிட்டிருந்தார்கள். அதில் அவர் சொல்லியிருக்கிற செய்தி, 27.6.2024 தேதியிட்ட இந்து தமிழ்திசை பத்திரிகையில் பக்கம் 6ல், மதுரை அருகில் அமைந்துள்ள தோப்பூரில் அமைந்துள்ள காசநோய் மற்றும் புற்றுநோய் அரசு மருத்துவமனையைப் பற்றி படித்து, உள்ளம் பூரித்தேன். அதன் தலைமை மருத்துவர் 11 ஆண்டுகளில் கொண்டுவந்த சீர்திருத்தங்களைப் பற்றி அறிந்து, அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். இப்படியோர் அரசு மருத்துவமனையா என்று வியந்து மனதுக்குள் பாராட்டினேன். டாக்டர் காந்திமதி நாதன் 30.6.2024 அன்று பணி நிறைவடைகிறார்கள். அவருக்கு ஈடான தலைமை அர்ப்பணிப்புள்ள தலைமை மருத்துவர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் காந்திமதிநாதனை எனக்குத் தெரியாது” என்று பெருமதிப்பிற்குரிய ப. சிதம்பரம் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு, இன்றைக்கு தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறதென்பதை எடுத்து சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த ஆண்டுக்கு நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று அறிவிப்பிற்கான புத்தகங்களெல்லாம் Action report ஆக வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கான அறிவிப்புகள் 110 என்கின்றவகையில் அறிவிப்புகளை வெளியிடவிருக்கிறோம். இந்த 110 அறிவிப்புகளைப் பொறுத்தவரையில், உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 110ல் அறிவித்தால், அந்த அறிவிப்புகள் நிச்சயம் செயல்முறைக்கு வரும். கடந்த காலங்களில் 110ல் அறிவிக்கப்பட்டால், மக்களுக்கு அது 111 ஆகவே கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் விதி 110ன்கீழ் அறிவித்துக்கொண்டிருப்பதைப்போன்று, இந்த துறையின் சார்பிலும் 110 அறிவிப்புகளை அறிவிக்க இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரை வழங்கினார்.

# திருப்பத்தூர் தொகுதியில் இசைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

## சட்டப் பேரவையில் அ.நல்லதம்பி கேள்வி!

சென்னை, ஜூலை 1 - சட்டப் பேரவையில் திருப்பத்தூர் தொகுதி உறுப்பினர் அ.நல்லதம்பி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அளித்த பதிலும் வருமாறு:



**அ. நல்லதம்பி:** திருப்பத்தூர் தொகுதியில் இசைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** தற்போது வாய்ப்பில்லை.

**அ. நல்லதம்பி:** தங்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்து, தொகுதியில் சுமார் 42,000 வாக்குகளைக் கூடுதலாகப் பெற பரப்புரை செய்த இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் சிலம்பாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், நாதஸ்வரம், தவில் கலைஞர்களும், குறிப்பாக, திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் தெருக் கூத்துக் கலைஞர்கள் அதிகமாக உள்ளனர். இப்பகுதியில் கலை ஆர்வலர்கள் நலனைக் கருதி, திருப்பத்தூர் மாவட்டத்தின் தலைநகரில் இசைப்பள்ளி துவங்கக் கோரினேன். எனது கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு, கலைப் பண்பாட்டுத் துறையின் வாயிலாக ஜவஹர் மன்றம் துவக்கிட அனுமதி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, அந்தப் பள்ளியில் தற்போது குரலிசை மாணவர்கள் 18 பேரும், பரதநாட்டியத்தைச் சேர்ந்த மாணவர்கள் 21 பேரும், ஓவியம் 17 பேரும், சிலம்பாட்டம் 23 பேர். ஆக, 79 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். திருப்பத்தூரில் இசைப் பள்ளி துவங்கினால், கூடுதலான கலை ஆர்வலர்கள் பயன்பெறுவார்கள். அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** கலைப் பண்பாட்டுத் துறையின்கீழ், நம்முடைய தமிழ்நாட்டிலே 17 மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இசைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்ற இந்த சூழ்நிலையில், திருப்பத்தூருக்கு அருகிலே கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மாவட்ட அரசு இசைப் பள்ளி நடைபெற்று வருகிறது. எனவே, எதிர்காலத்தில் அவருடைய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக துறை பரிசீலிக்கும்.

**அ.நல்லதம்பி:** கலைப் பண்பாட்டுத் துறையின் மண்டல அலுவலகம் திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** ஏற்கெனவே தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, கோவை என 7 மண்டலங்களாக கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. எனவே, தேவையிருப்பின் உறுப்பினருடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும், கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கொண்டியங்குப்பம். கூடலூர், டட்நகர் பகுதிகளில் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வின் போது சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு ராஜா, பகுதி செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம் மாவட்ட அமைப்பாளர்கள் ப.பிரகஷ். துபாய் வி.ஆர்.விஜாய், திருமலை பொன்னுரங்கம் மற்றும் வட்ட செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.